**செய்தி வெளியீடு: 076** **நாள் :03.02.2016**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** ஜிகா வைரஸ் (ZIKA Virus) மூலம் பரவும் நோய் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி மையத்தில் இன்று (03.02.2016) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்த்துறை செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர் க. குழந்தைசாமி, கூடுதல் இயக்குநர் டாக்டர் பி. வடிவேலன் மற்றும் இணை இயக்குநர் டாக்டர். எஸ். சரவணன் மற்றும் சுகாதாரத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜிகா வைரஸ் நோய் டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களால் பரப்பப்படுகிறது. ஜிகா வைரஸ் முதல் முதலில் 1947 ஆம் ஆண்டு உகண்டாவில் உள்ள ஜிகா என்ற காட்டில் கண்டறியப்பட்டது. இந்த நோயின் தாக்கம் ஆப்ரிக்கா, தென்அமெரிக்கா மற்றும் பசிபிக் நாடுகளில் அதிகமாக உள்ளதால் உலக சுகாதார நிறுவனம் **“உலகளாவிய பொது சுகாதாரம் அவசர நிலை”** என பிரகடனபடுத்தியுள்ளது. ஆனால் தற்சமயம் இந்நோய் இந்தியாவில் கண்டறியப்படவில்லை. இருப்பினும் இந்நோய் தமிழ்நாட்டில் பரவாமல் இருப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காய்ச்சல், தோலில் அரிப்பு, கண் சிவப்பு , மூட்டு வலி, உடல் சோர்வு, தலைவலி போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும். இவை 2 – முதல் 7 நாட்கள் வரை நீடிக்கும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** ஏடிஸ் கொசுக்களால் பரவும் டெங்கு, மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு கொசு ஒழிப்பு பணி தீவிரப்டுத்தும் வகையில் கொசு ஒழிப்பு தற்காலிகப் பணியாளர்கள் வட்டத்திற்கு 10 நபர்கள், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 20 நபர்கள் மற்றும் மாநகராட்சியில் தேவைக்கு ஏற்ப தற்காலிகப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு கொசு ஒழிப்பு பணி சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது. இப்பணியாளர்கள் குழுக்களாக பல்வேறு பகுதிகளுக்கு சென்று கொசு புழு வளரும் இடங்களை கண்டறிந்து அதனை அழித்தும் (Source Reduction) பூச்சி மருந்து தெளித்தும் (Treatment) முதிர் கொசுக்களை அழிப்பதற்கு புகை மருந்து அடித்தும், சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தியும், கொசு உற்பத்தியை வெகுவாக குறைத்து வருகின்றனர்.

கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான சுமார் 10,108 புகை அடிப்பான்கள் ஊரக, பேரூராட்சி மற்றும் மாநகராட்சி மற்றும் பொது சுகாதார துறைகளில் உள்ளன. (9,861) கையால் எடுத்துச் செல்லும் புகைஅடிப்பான்கள் மற்றும் (247 வாகனத்தில் பொருத்தப்பட்ட புகை அடிப்பான்கள்) இப்பணிகளை சிறப்பாக செய்வதற்கு 175 கையால் எடுத்துச் செல்லும் புகை அடிப்பான்கள், வாகனத்தில் பொருத்தப்பட்ட புகை அடிப்பான்கள் 25 கூடுதலாக பொது சுகாதாரத் துறை சார்பாக வாங்கப்பட்டு ஏடிஸ் வகை கொசுவினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட திட்டமிட்டபடி பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே ஜிகா வைரஸ் நம் நாட்டில் இல்லை என்ற நிலை இருந்தும் அந்நோயை பரப்பும் ஏடிஸ் கொசு ஒழிப்பு பணி செவ்வனே செய்யப்பட்டு வருவதால் தமிழகத்தில் இந்நோய் பரவ வாய்ப்பு அறவே இல்லை என உறுதிப்படுத்தப்படுகிறது. தொற்று நோய்களை தடுக்கும் வகையில் அனைத்து மருத்துவமனைகளும் தயார் நிலையில் உள்ளன.

இந்நோய்க்கு அறிகுறிகளுக்கேற்ப தற்போது உபயோகிக்கப்படும் மருந்துகளை கொண்டே அவற்றை எளிதில் கட்டுப்படுத்த முடியும். இம்மருந்து மாத்திரைகள் அனைத்து அரசு மருத்துவமனைகளில் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. கொசு ஒழிப்பு பணிக்கு தேவைப்படும் கொசு புழு கொல்லி மருந்து, முதிர் கொசு கொல்லி மருந்து, புகையடிப்பான்களும் தேவையான அளவில் இருப்பில் உள்ளது. தமிழகத்தில் துறைமுகம், விமான நிலையம், ஆகிய இடங்களில் ஜிகா வைரஸ் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு இந்நோயின் அறிகுறிகள் உள்ளதா என பரிசோதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து விமானம் மற்றும் துறை முகங்களில் ஏடிஸ் கொசுக்கள் இனப் பெருக்கம் உள்ளதா என கண்டறியும் பணி மற்றும் கொசு ஒழிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**